10

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# மத்திய மாகாண—மாகாண சபை

*(உள்ளூராட்சி, கல்வி, கைத்தொழில், கால்நடை வளர்ப்பு அமைச்சு.)*

# 1990 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, மத்திய மாகாணத்தின்—மாகாண சபையின் கல்வி நியதிச்சட்டம்

*(ஆளுநர் அனுமதி 1990 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆம் திகதி வழங்கப்பட்டது).*

மத்திய மாகாண—மாகாண சபையின் கட்டளையின்படி பதிப்பிக்கப்பெற்றது.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
மத்திய மாகாண—மாகாண சபை

(உள்ளூராட்சி, கல்வி, கைத்தொழில், கால்நடை வளர்ப்பு அமைச்சு).

# 1990 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, மத்திய மாகாணத்தின்—மாகாண சபையின் கல்வி நியதிச்சட்டம்

*மத்திய மாகாண — மாகாண சபையில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் இந்நியதிச்சட்டம் அங்கீகரிக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.*

*தலைவர்,*
*மத்திய மாகாண — மாகாண சபை.*

8

# மத்திய மாகாண-மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 3 ம் இலக்க, கல்வி நியதிச்சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பிற்கான 13 ஆம் திருத்தத்தின் 9ம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள 1 ஆம் பட்டியலின் 3ம் விடயத்திற்கமைவாக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள கருமங்களுக்காகவும், மத்திய மாகாணத்திற்கான கல்வித்திணைக்களம் ஒற்றினை தாபிப்பதற்குமான நியதிச்சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாண—மாகாண சபையினால் பின்வருமாறு நிறைவேற்றப்படுவதாகுக.

1. இந்நியதிச்சட்டம் இலங்கையின் மத்திய மாகாண—மாகாண சபையின் 1990 ம் ஆண்டின் 3 ம் இலக்க கல்வி நியதிச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் ஆளுனரினால் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. இந்நியதிச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கல்வித் திணைக்களமொன்று தாபிக்கப்படுதலுடன், கல்விப் பணிப்பாளர் ஒருவர், பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், ஏனைய அலுவலர்கள், ஊழியர்கள் என்போர், அவ்வப்போது நியமிக்கப்படலாம்.

3. (i) கல்வி அமைச்சரின் பொதுப்பணிப்புரைகள், கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கமைவாக கல்விப்பணிப்பாளரும், மற்றும் அலுவலர்களும், இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அதன் கீழ் அமைக்கப்படும் உபவிதிகளின் ஏற்பாடுகள் என்பவற்றை நடைமுறைப்படுத்தவும் பிரயோகிக்கவும் தத்துவம் உடையோராதல் வேண்டும்.

(ii) இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள், அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய பணிப்பாளரால் வழங்கப்பட்ட கட்டளையொன்றை அல்லது எடுக்கப்பட்ட முடிவொன்றை அமைச்சரானவர் மேன்முறையீடொன்றின் பேரிலோ, அல்லது வேறுவகையிலோ, முற்றாக நீக்கிவிடவோ, திருத்தியமைக்கவோ, மாற்றிவிடவோ கூடுமென்பதுடன் அவ்வாறான அமைச்சரின் முடிவு சட்டரீதியானதாயும் இறுதியானதாயும் அமையும். அவ்வாறான அமைச்சரின் முடிவுக்கு பணிப்பாளரும் பாதிக்கப்பட்ட பகுதியினரும் கட்டுப்படுதல் வேண்டும்.

## பாகம் 1

### பாடசாலை ஆலோசனைச் சபைகள், பெரும்பாகக்கல்வி ஆலோசனைச் குழுக்கள், மத்திய மாகாண கல்வி ஆலோசனைச்சபை என்பன தாபித்தல்

4. (1) மாகாண பிரதான அமைச்சரின் விருப்பிற்கமைய மத்திய அரசின் கல்வி அமைச்சரினால் நியமிக்கப்படும் அவ்வாறான ஏழு ஆட்களுக்கு குறையாத அங்கத்தவர்களைக் கொண்டதான மாகாண கல்வி ஆலோசனைச் சபையொன்று தாபிக்கப்படல் வேண்டும்.

(2) ஆலோசனைச்சபையின் தவிசாளராக, அமைச்சரானவர் அமைச்சின் செயலாளரை பெயர் குறித்து நியமித்தல் வேண்டும்.

(3) சபையின் செயலாளராக, கல்வித்திணைக்களத்தின் அலுவலரொருவரை அமைச்சர் பெயர் குறித்து நியமிக்கலாம்.

(4) இச்சபையானது தான் ஆலோசனை வழங்கத்தகுதியானது எனக்கருதும் விடயங்கள் சார்பாகவும், இக்குழுவின் ஆலோசனைக்காக அமைச்சரால் சமர்ப்பிக்கப்படும் கல்வி சம்பந்தமான எல்லா விடயங்களிலும் அமைச்

சருக்குத் தனது ஆலோசனையை வழங்கும் கடமையைக் கொண்டதாய மையும்.

(5) இச்சபையின் கூட்டத்திற்கான அழைப்பு விடுத்தல், கூட்டங்களைக் கூட்டுதல், கூட்டத்தின் நடைமுறைகள், மேற்கொள்ளும் நடவடிக்கை கள் என்பன தொடர்பான ஏற்பாடுகளை மாகாண சபையின் அங்கீகாரத் துடன் அமைச்சரானவர் வகுத்து வழங்கலாம்.

(6) மத்திய அரசின் கல்வி அமைச்சருக்கு எழுத்து மூலம் அறிவித்ததின் பேரில் இக்குழுவின் அங்கத்தவரொருவர் எச்சந்தர்ப்பத்திலும் தனது அங்கத்துவபதவியினின்றும் விலகலாம். அத்தோடு மத்திய அரசின் கல்வி அமைச்சரானவர், மாகாண பிரதான அமைச்சரின் இசைவுடன் இக்குழு வின் அங்கத்தவர் ஒருவரை அவ்வாறான அங்கத்துவப் பதவியினின்று விலக்கலாம்.

(7) இச்சபையின் அங்கத்தவரொருவர் தானே கேட்டு விலகியதன் பேரில் அல்லது மத்திய அரசின் கல்வி அமைச்சரினால் விலக்கப்பட்டதன் பேரில் பதவியினின்றும் நீங்கினால் ஒழியதான் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டாண்டுகள் கொண்ட காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும்.

(8) இச்சபையானது தன்னகத்தேயுடைய செயற்பாடுகளில் ஏதேனு மொன்றை நிறைவேற்றுவதற்காகவோ அல்லது கல்வியுடன் தொடர் புடைய ஏதேனுமொருதுறை சார்பாக செயற்படுதற்காகவோ, குறித்த அச்செயற்பாட்டினை மேற்கொள்வதற்காக மட்டுமென உபகுழுக்களை நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்படுவதான உபகுழுக்கள், இச்சபை யின் பொது பணிப்புகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டதாய் செயற்படுதல்.

5. (1) கோட்டப்பிரதேச கல்வி தொடர்பாகவும், கல்வித் தேவைகள் தொடர் பாகவும் பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்குவதற்கென கோட்ட கல்வி ஆலோசனைக் குழுக்களை அமைச்சரானவர் நியமிக்கலாம்.

(2) (அ) பெரும்பாக உதவிக்கல்விப்பணிப்பாளர்.

(ஆ) பிரிவெல்லைக்குள் அமைந்துள்ள, மாநகரசபையின் நகரமுதல்வர், நகரசபையின் தலைவர், பிரதேச சபைகளின் தலைவர்கள்.

(இ) பிரிவெல்லைக்குள் அமைந்துள்ள, மாநகரசபையின் ஆணையாளர், நகர சபையின் செயலாளர், பெரும்பாகச் செயலாளர்கள்.

(ஈ) கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளரினால் பெயர் குறிக்கப்படும் பிரிவெல்லைக்குள் அமைந்துள்ள ஏதேனும் மூன்று பாடசாலை களின் அதிபர்கள்.

(உ) கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளரினால் பெயர் குறிக்கப்படும் பிரிவெல்லைக்குள் அமைந்துள்ள பாடசாலை மாணவத்தலைவர் களுள் ஐந்துக்கும் மேற்படாத தொகையினர்.

என்பவர்களைக் கொண்டதாய் ஒவ்வொரு கோட்ட கல்வி ஆலோசனைக் குழுக்களும் அமையும்.

(3) கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் அவ்வப் கோட்டக்கல்வி ஆலோசனைக் குழுக்களின் தவிசாளர்களாதல் வேண்டும்.

(4) இக்குழுவின் செயலாளர், குழுவின் முதற்கூட்டத்தின்போது தெரிவு செய்யப்படல் வேண்டும்.

(5) குறித்த கால எல்லையில், குறித்தவாறாக அழைப்பு விடுப்பதன் மூலம் கூடும் இவ்வாலோசனைக்குழு பணிப்பாளர்/ உதவிப்பணிப்பாளர் என்ப வர்களால் அதன் பாரபடுத்தப்படும் கல்வி தொடர்பான விடயங்களில் நடவடிக்கை மேற்கொண்டு தனது அபிப்பிராயத்தை வழங்குதல் வேண் டும்.

(6) பணிப்பாளர்/ உதவிப்பணிப்பாளரால் இக்குழுவின் பாரப்படுத்தப்படும் கல்வி தொடர்பான விடயங்களில் ஆலோசனை வழங்குதல் தவிர்ந்த எந்தவொரு நிர்வாக, செயற்பாட்டு கடமைகளையோ, தத்துவங் களையோ கொண்டதாய் இக்குழு அமையாது.

6. (1) மத்திய அரசின் கல்வி அமைச்சினால் வகுக்கப்பட்டுள்ள விதிமுறை களுக்கமைவாக, மாகாண எல்லைக்குட்பட்ட பாடசாலைகளுக்கென பாடசாலை ஆலோசனைச் சபைகள் தாபிக்கப்படல் வேண்டும்.

(2) பாடசாலையின் அமைப்பு, கட்டுப்பாடு, அபிவிருத்தி, ஒழுக்கம் தொடர்பாக பணிப்பாளரால்/ உதவிப்பணிப்பாளரால் தன்பால் படுத்தப்படும் கல்வி சம்பந்தப்பட்ட விடயங்கள் பேரிலும் தாம் ஆலோசனை வழங்கத்தகுதியுடையதெனக் கருதும் விடயங்களிலும் பாடசாலை நிர்வாகத்திற்கு ஆலோசனை வழங்குதல் இச்சபையின் கட்டுப்பாடாகும்.

(3) பாடசாலை ஆலோசனைச் சபையானது நிர்வாக அல்லது செயற்பாட் டுத்தத்துவங்களெதனையும் கொண்டதாய் அமையமாட்டா.

(4) பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் அல்லது பாதுகாவலர் களைக்கொண்டதாய் இச்சபை அமையும்.

(5) பாடசாலை அதிபர் இவ்வாலோசனைச் சபையின் தவிசாளராதல் வேண்டும்.

(6) இச்சபையானது தாபிக்கப்பட்டதன் பின்னர் கூடும் முதற்கூட்டத்தின் போது செயற் குழுவொன்றினைத் தெரிவு செய்து கொள்ளல் வேண்டும்.

7. பாடசாலையில் சேர்வதற்காக சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு விண்ணப் பமும் விண்ணப்பதாரியின் அல்லது பெற்றோரின் சாகியம், சமயம், தேசியம், குலம், சமுக நிலை, மொழி என்பவை காரணமாக நிராகரிக் கப்படலாகாது.

8. பாடசாலை விஸ்தரிப்புக்காக கட்டிடமெதையும் அமைக்கவோ, அல்லது விடுதிகள், பாடசாலைத் தோட்டம், அல்லது விளையாட்டு மைதான மொன்றினை அமைக்கவோ தனியார் காணியொன்றினை வேண்டுமிடத்து அக்காணியானது நடைமுறைச்சட்டத்திற்கமைய, மாகாண சபையினால் முறைப்படி கையேற்கப்படல் வேண்டும்.

9. மாகாண அமைச்சின் பொறுப்பிலுள்ள பாடசாலையொன்றில் மாணவர்

(1) மாகாண அமைச்சின் பொறுப்பிலுள்ள பாடசாலையொன்றில் மாண வர் சேர்வொன்றிற்காக கட்டணம் எதுவும் அறவிடப்படலாகாது.

(2) (1) ஆம் உட்பிரிவின் விடயம் தவிர்ந்த ஒரு பாடசாலையினால் வழங்கப்படும், விளையாட்டு, உடற்பயிற்சி, கல்வி, ஓய்வுநேர விளை யாட்டு, அல்லது சுகாதார சேவைகளுக்காக இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மாசற்றவகையில் கட்டணம்/ கட்டணங்களை அறவிடு வதற்கான உபவிதிகளை அமைக்கலாம்.

10. அமைச்சரானவர் அல்லது பணிப்பாளர் அல்லது அமைச்சினதோ, திணைக் களத்தினதோ மேற்பார்வை அலுவலரொருவர், அல்லது அமைச்சரால் அல்லது பணிப்பாளரால் பொதுவாகவோ அன்றி குறிப்பாகவோ பணிக்கப் பட்ட ஆளொருவர் பாடசாலை யொன்றின் எல்லைக்குள் பிரவேசிக்க அல்லது பாடசாலையின் நடவடிக்கை அதன் சொத்துக்கள் என்பவற்றைப் பரிசீலனை செய்யவோ தத்துவமுடையவராவர்.

11. மாறுபட்டவாறாக நிரூபிக்கப்படாத விடத்து ஒரு மாணவன் தான் வதியும் வதிவிடத்தவரே அம்மாணவனின் பாதுகாவலரெனக்கருதப்படும்.

## பகுதி 11

**உபவிதிகளை அமைப்பதற்கான அமைச்சரின் தத்துவங்கள்**

12. (1) இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகள், நோக்கங்கள் என்பவற்றின் பயனுக்காக அமைச்சரானவர் உபவிதிகளை அமைக்கலாம். அவ்வாறு அமைக்கப்படும் உபவிதிகள், விதிக்கோவை என வழங்கப்படும்.

(2) குறிப்பாக அமைச்சரானவர் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உபவிதிகளை ஆக்கலாம்.

i. மாகாணத்தில் தேசிய பாடசாலைகள், பாதுகாப்புச் சேவையினருக்கான விசேட பாடசாலைகள், குறித்த அபிவிருத்தி திட்டமொன்றின் கீழ் அமையும் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளுக்கான வசதிகளை ஏற்படுத்தல்.

ii. மேலே 1 உட்பிரிவில் காட்டிய விசேட பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளினதும், பாடசாலை முன் கற்கை நிலையங்களினதும் கண்காணிப்பும் நிர்வாகமும்.

iii. ஆசிரியர் சேவை, கல்வி சேவைகள் சம்பந்தமான பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு.

iv. 1 ஏ, 1 பி, 1 சி பிரிவுகளைச் சேர்ந்த அதிபர்கள் தவிர்ந்த ஏனைய தரத்திலான அதிபர்களை நியமித்தல்.

v. கல்விச் சேவையின் ஆளணியினருக்கான, ஒழுக்கக்கட்டுப்பாடும், இடமாற்றமும்.

vi. மாகாண அமைப்பிலான கல்வி அபிவிருத்தித் திட்டங்களை ஆக்குதலும் நடைமுறைப்படுத்தலும்.

vii. வருடாந்த கல்வி அபிவிருத்தித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்.

viii. அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விச் சேவை அலுவலர்களின் சேவை மதிப்பீடு.

ix. கல்விக்கான தேசிய சபையின் முன் அங்கீகாரத்துடன் சேவைக்காலப்பயிற்சிகளை நடாத்துதல்.

x. பரீட்சை ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட மாகாணத்திற்குட்பட்ட பரீட்சைகளை நடாத்துதல்.

xi. முறைசாராக் கல்வித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

xii. பாடசாலை முன் கற்கை நிலையங்களைப் பதிவு செய்தல்.

xiii. ஆரம்பப்பாடசாலைகளுக்கான, அல்லது இடைநிலைப்பாடசாலைகளுக்கான, குறித்த பாடங்களுக்கான, பாடத்திட்டங்களில் தேவையான மாற்றங்கள் கொண்டுவர வேண்டின், அதற்கான தேசிய கல்விச்சபையின் அங்கீகாரம் பெறல்.

xiv. பாடசாலைக்கட்டிடங்கள், நூலகங்கள், மைதானங்கள் என்பவற்றை நிர்மாணித்தலும் பேணுதலும்.

xv. கற்பித்தல் சாதனங்கள், செவிப்புலச் சாதனங்கள், கட்புலச் செவிப்புலச்சாதனங்கள், தளபாடங்கள் மற்றும் உபகரணங்களைப் பெறுதலும் விநியோகித்தலும்.

xvi. விஞ்ஞான உபகரணங்கள் பெறுதலும் விநியோகித்தலும்.

xvii. மத்திய கல்வி அமைச்சின் அங்கீகாரத்துடன் பாடநூல்களைத் தயாரித்தலும் விநியோகித்தலும்.

xviii. தேசிய நூலக சபையின் வழிகாட்டலுக்கமைய பாடசாலை நூல்நிலையங்களை நிர்மாணித்தலும் அபிவிருத்தி செய்தலும்.

xix. மாகாணத்திற்குட்பட்ட கோட்டகல்விப் பிரிவுகளின் எல்லைகளை நிர்ணயித்தல்.

xx. பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்த்தல், பாடசாலைகளுக்கான கல்விப்பிரிவுகளை நிர்ணயித்தல், உசாத்துணை நூல்கள், உபகரணங்கள், என்பவற்றை நிர்ணயித்தல்.

xxi. பாடசாலைத் தவணை நேரசூசிகள் பாடசாலைகளுக்கான விடுமுறை நாட்களை நிர்ணயித்தல்.

xxii மாணவர்களுக்கான மருத்துவப் பரிசோதனை, மருத்துவ சேவைகள், சுகாதாரம், சுகஜீவனம், மதியபோசனம் இலவசப் புத்தக விநியோகம் என்பன சார்ந்த விடயங்கள்.

xxiii மத்திய அரசின் தரக் கொள்கைகட்கமைய மாகாணத்துக் குட்பட்ட பாடசாலைகளைத் தரப்படுத்தல், தரமுயர்த்துதல், வகைப்படுத்தல், புதிய பாடசாலைகளை அமைத்தல்.

xxiv. முதியோர் கல்வித் தேவைக்காக திட்டமமைத்தலும் நடைமுறைப்படுத்தலும்.

xxv. மாகாணக் கல்வித் தேவைக்கமைவாக வரவு செலவு திட்டம் வகுத்தலும். கண்காணித்தலும் முகாமைப்படுத்தலும்.

xxvi கல்வி விடயத்துக்கு பொருந்தும் என அமைச்சர் அபிப்பிராயப்படும் ஏனைய விடயங்கள்.

*12. (3)* இந்நியதிச்சட்டத்தின் கீழ் அமைக்கப்படுவதான உபவிதிகள் மாகாண சபையினதும் ஆளுநரினதும் அங்கீகாரம் பெற்றதன் பேரில் சட்டமொன்றின் வலுவினைப்பெற்றதாய் அமையும்.

## பகுதி 111 பொது

### சொற்பொருள் கோடல்

*13. (1)* இந்நியதிச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவாறாகத் தேவைப்படுத்தினாலொழிய

''ஆளுநர்'' எனப்படுபவர் மத்திய மாகாணத்தின் ஆளுநராவார்.

''பிரதான அமைச்சர்'' எனப்படுபவர் மத்திய மாகாணத்தின் பிரதான அமைச்சராவார்.

''அமைச்சர்'' எனப்படுபவர் மத்திய மாகாணத்தின் கல்வி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சராவார்.

''செயலாளர்'' எனப்படுபவர் மத்திய மாகாணத்தின் கல்வி அமைச்சின் செயலாளராவார்.

''திணைக்களம்'' எனப்படுவது மத்திய மாகாணத்தின் கல்வித் திணைக்களமாகும்.

''பணிப்பாளர்'' எனப்படுபவர் மத்திய மாகாணக் கல்விப் பணிப்பாளரும், கல்விப் பணிப்பாளரின் அங்கீகாரத்துடன் அவர்தம் கடமைகள் அல்லது தத்துவங்களின் குறிப்பிட்ட ஒரு பகுதியை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்ட திணைக்கள அலுவலரும்.

''மேலதிக பணிப்பாளர்'' எனப்படுபவர், மத்தியமாகாண மேலதிகக் கல்விப்பணிப்பாளராகும்.

''உதவிப்பணிப்பாளர்'' எனப்படுபவர் கோட்ட கல்விக் காரியாலயத்திற்கான உதவிக்கல்விப் பணிப்பாளராகும்.

''மாகாண ஆலோசனைச்சபை'' எனப்படுவது இந்நியதிச்சட்டத்தின் 4 (1) பிரிவின் கீழ் அமைக்கப்பட்டதான மாகாண கல்வி ஆலோசனைச் சபையாகும்.

''கோட்ட ஆலோசனைக் குழு'' எனப்படுவது இந்நியதிச்சட்டத்தின் 5 (1) பிரிவின் கீழ் அமைக்கப்பட்டதான பெரும்பாகக் கல்வி ஆலோசனைக் குழுவாகும்.

''பாடசாலை ஆலோசனைச்சபை'' எனப்படுவது இந்நியதிச்சட்டத்தின் 6 (1) பிரிவின் கீழ் அமைக்கப்பட்டதான பாடசாலை ஆலோசனைச் சபையாகும்.

''கல்வித்தேவைகள்'' எனப்படுவது உபவிதிகள் எடுத்துக்காட்டப்படுவதான கல்வி தொழில்நுட்பப்பயிற்சி வசதிகளாகும்.